**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

முன்னிலை **திருமதி.ஆ. சீதாலெட்சுமி, எம். ஏ., பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, மன்னார்குடி.

2025-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19 ஆம் நாள் புதன்கிழமை

திருவள்ளுவராண்டு 2055, ஸ்ரீ குரோதி வருடம் பங்குனித்திங்கள் 05-ஆம் நாள்.

**இடைநிலை மனு எண்.702/2024-ல்**

**அசல் வழக்கு எண்.16/2023**

ரமேஷ் .... மனுதாரர்/வாதி

//எதிர்//

சுபாஷ் .... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.தினகரன், B.A., B.L., அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.விஜயன், B.A., B.L.,அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இது நாள் வரை என் பரிசீலணையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

இம்மனுவில் மனுதாரர் அசல் வழக்கில் கூடுதல் எதிர் வழக்குரை தாக்கல் செய்ய அனுமதியளித்து வழக்கை மேல் நடத்த வேண்டி மனுதாரர்/வாதி உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 8 விதி 9 மற்றும் பிரிவு 151 -ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுதாரர்/ பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்த மனுவின் சுருக்கம் :-**

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி ஆவார். இந்த வழக்கு எதிர்மனுதாரர்/வாதி வழக்கு சொத்தில் மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு வியாஜ்ஜித்துள்ளார். இந்த வழக்கில் சொல்லியுள்ள

சொத்துக்கள் அனைத்தும் மனுதாரரது தகப்பனார் வழி பூர்வீக சொத்துக்களாகும். அவையாவும் கடந்த 1972 ம் தேதியிட்ட பாக ஆவணபடிக்கு மனுதாரரது தகப்பனாருக்கு கிடைத்ததன்பேரில் அவருடன் சேர்ந்து மனுதாரரும், எதிர்மனுதாரரும், மனுதாரரது சகோதரிகள் அனைவரும் கூட்டாக சேர்ந்து ஆண்டு, அனுபவித்து வரும் சொத்தில் மேற்சொன்ன எல்வோருக்கும் இணை உரிமை (Coparcenary Right) இருக்கும்போது எதிர்மனுதாரர்/வாதி மனுதாரருக்கே உடைமைப்பட்ட சொத்துக்களைபோல் வழக்கிட்டுள்ளது சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் விரோதமானது.

இந்த உபயதரப்பினர்களின் பூர்வீக சொத்தில் இணை உரிமையாளர்கள் யார் அனுபவித்தபோதிலும் அதில் மற்ற இணை உரிமையாளர்கள் எல்லோருக்கும் கட்டுப்படுத்தும். இந்நாள் வரையில் உபயதரப்பினர்கள் குடும்பத்தில் பாகப்பிரிவினை ஆவணம் எதுவும் நடைபெறவில்லை. மேலும் இந்நாள்வரையில் வழக்கு சொத்துக்களும், இதில் விடுபட்ட சொத்துக்களும் அபிபக்த பிரிபடாத இந்து கூட்டு குடும்ப (HUF) சொத்துக்களாகும். யாதொரு இணை உரிமையாளரும் (Coparcenar) சேர்ந்த மற்ற இணை உரிமையாளருக்கு எதிராக எந்த பரிகாரமும் கோர முடியாது என்பது உறுதி செய்யப்பட்ட சட்ட நடைமுறைகளாகும் (Settled Provisions).

எனவே சென்ற 2023 ல் இந்த மனுதாரரால் எதிர்மனுதாரர், அவரது தகப்பனார், சகோதரிகள் ஆகியோரை சேர்த்து திருவாரூர் மாவட்ட முதன்மை நீதிமன்றத்தில் பாகப்பிரிவினை வழக்கு வியாஜ்ஜிக்கப்பட்டு, அது அசல் வழக்கு எண்.50/2023 ஆக எண்ணிடப்பட்டுள்ளது. அதன் விவரங்களை இந்த வழக்கில் கூடுதல் எதிர்வழக்குரையாக தாக்கல் செய்ய அனுமதிக்க வேண்டியது அவசியமாகிறது. மேலும் இந்த வழக்கில் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யும் உரிமையை தக்க

வைத்துகொண்டுதான் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார். ஆகையால் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய அனுமதித்து வழக்கை மேல்நடத்த வேண்டி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) **எதிர்மனுதாரர் /வாதி தரப்பில் தாக்கல் செய்த ஆட்சேபனை :-**

மனுதாரரால் தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும், உண்மை நிலவரப்படிக்கும் நிலைநிற்க கூடியதல்ல. இதனடியில் குறிப்பாக ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளை தவிர ஏனைய சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார். மேற்படி வாதியால் தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கில் வாதி தரப்பு முதல் விசாரணைக்காக வாய்தா போடப்பட்டிருந்த நிலையில் இவ்வழக்கினை தாமதப்படுத்த வேண்டும் என்ற ஒரே கெட்ட எண்ணத்தில் தற்பொழுது இதுபோன்றதொரு மனு அளித்திருப்பது சட்டப்படி ஏற்புடையதல்ல.

மேற்படி வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள அசல் வழக்கில் வாதிக்கு சாதகமாக யாதொரு நீதியின பலனும் கிடைத்துவிடக்கூடாது என்று பிரதிவாதி மேற்படி அசல் வழக்கு நிலுவையில் இருக்கும்போது வழக்கிற்கு சம்மந்தமில்லாத பல்வேறு இடைநிலை மனுக்களை அளித்து வழக்கினை தாமதப்படுத்தும் நோக்கிலேயே செயல்பட்டு வருகின்றார் என்று வாதி தெரிவித்துள்ளார்.

மேற்படி வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள அசல் வழக்கில் பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு பலமுறை வாய்ப்புகள் அளிக்கப்பட்டு அதன் பிறகு, பிரதிவாதியால் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டது என்றும், அதனை தொடர்ந்து எழுவினாக்கள் வனையப்பட்டு தற்பொழுது வாதி தரப்பு முதல் விசாரணை தொடங்குவதற்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில் பிரதிவாதி தரப்பில் கூடுதல்

எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வேண்டும் என்று இந்த மனுவினை அளித்திருப்பது எந்த விதத்திலும் ஏற்புடையதல்ல என்ற வகையில் எதிர்மனுதாரர்/வாதி தாக்கல் செய்த மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிர்மனுதாரர் எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

**4) இம்மனுவில் தீர்வுக்காணப்படவேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.**

**5) <u>தீர்வு</u> :-**

**1.** இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. மனு, அபிடவிட், எதிருரை, வழக்காவணங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டது.

**2.** இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**3.** இம்மனுவினை பரிசீலிக்கும் போது, அசல் வழக்கானது தாவா சொத்தில் பிரதிவாதியோ, அவரது ஆட்களோ, முகவர்களோ எவ்வித இடையூறோ, அத்துமீறலோ, ஆக்கிரமனமோ செய்யக்கூடாது என பிரதிவாதிக்கு எதிராக ஓர் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, எதிர்வழக்குரை தாக்கல் செய்து, எழுவினாக்கள் வனையப்பட்டு வாதி தரப்பு விசாரணைக்காக வாய்தா போடப்பட்ட நிலையில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது.

**4.** தாவா சொத்தானது மனுதாரரின் தகப்பனார் வழி பூர்வீக சொத்து என்றும், மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் அவர் சகோதரிகள் அனைவரும் கூட்டாக சேர்ந்து அனுபவித்து வருவதாகவும், கடந்த 2023 அன்று மனுதாரரால் மாண்புமிகு மாவட்ட முதன்மை நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.50/2023 ஆக பாகப்பிரிவினை வழக்கு

தாக்கல் செய்துள்ளதகாவும், கூட்டுரிமையாளர்களுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க இயலாது என்றும் கூறி மேற்கண்ட பாகப்பிரிவினை வழக்கு தொடர்பாக கூடுதல் எதிர் வழக்குரை தாக்கல் செய்ய அனுமதி கோரியுள்ளார். எதிர்மனுதாரர் தரப்பில் இம்மனு தொடர்பாக ஆட்சேபணை தெரிவித்துள்ளபோதும் ஒரு முழுமையான தீர்வு கிடைக்க வேண்டும் என்பதற்காகவும் மனுதாரர் அவரது தரப்பு வழக்கை நிரூபணம் செய்ய வேண்டிய ஒரு வாய்ப்பு அழிக்க வேண்டியது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று தீர்மானித்து இம்மனுவை அனுமதித்து தீர்வு காண்கின்றது.

6) முடிவாக, இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் நேரடியாக கணினியில் சொல்லப்பட்டு, சுருக்கெழுத்து-தட்டச்சரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த இந்நீதிமன்றத்தில் இன்று (19.03.2025) அவையறியப் பகரப்பட்டது.

ஒம்/- (**A.சீதாலெட்சுமி**)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.

<u>**விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்:**</u>

**இரு தரப்பிலும்** : இல்லை

ஒம்/- (**A.சீதாலெட்சுமி**)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

முன்னிலை **திருமதி.ஆ. சீதாலெட்சுமி, எம். ஏ., பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, மன்னார்குடி.

2025-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19 ஆம் நாள் புதன்கிழமை

திருவள்ளுவராண்டு 2055, ஸ்ரீ குரோதி வருடம் பங்குனித்திங்கள் 05-ஆம் நாள்.

**இடைநிலை மனு எண்.702/2024-ல்**

**அசல் வழக்கு எண்.16/2023**

திரு.ரமேஷ், வயது 60, த/பெ.R.M.கிருஷ்ணமூர்த்தி, வசிப்பிடம் தெற்கு தெரு, பைங்காநாடு கிராமம், மன்னார்குடி தாலுக்கா மற்றும் டி.மு.இலாக்கா, திருவாரூர் மாவட்டம்.

..... மனுதாரர்/வாதி

// எதிர்//

திரு.சுபாஷ், வயது 50, த/பெ.R.M.கிருஷ்ணமூர்த்தி, வசிப்பிடம் தெற்கு தெரு, பைங்காநாடு கிராமம், மன்னார்குடி தாலுக்கா மற்றும் டி.மு.இலாக்கா, திருவாரூர் மாவட்டம்.

.... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனுவில் மனுதாரர் அசல் வழக்கில் கூடுதல் எதிர் வழக்குரை தாக்கல் செய்ய அனுமதியளித்து வழக்கை மேல் நடத்த வேண்டி மனுதாரர்/வாதி உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 8 விதி 9 மற்றும் பிரிவு 151 -ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**இம்மனு தாக்கல் ஆன நாள்** :- 18.12.2024

**இம்மனு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள்** :- 20.12.2024

இம்மனுவின் மீது ரூ. 20/- நீதிமன்றக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

இம்மனு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.தினகரன், B.A., B.L., அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.விஜயன், B.A., B.L.,அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இது நாள் வரை என் பரிசீலணையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**<u>தீர்ப்பாணை உத்தரவு</u>**

01. இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

02. செலவுத்தொகை இல்லை.

2025ம் ஆண்டு மார்ச் மாதம் 19-ம் நாள் என்னுடைய கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டன.

ஒம்/- (**A.சீதாலெட்சுமி**)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.